# கூட்டுறவுச் சங்கங்களுக்கான இடைத் தேர்தல்

## ஜூன்'23ல் வேட்புமனுத்தாக்கல்

## ஜூன்'27ல் வாக்குப்பதிவு

## மாநிலத் தேர்தல் ஆணையர் அறிவிப்பு

தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்களில் காலியாக உள்ள நிர்வாகக்குழு உறுப்பினர்கள், தலைவர்கள், துணைத்தலைவர்கள் ஆகிய பதவிகளை நிரப்புவதற்கான இடைத்தேர்தல் ஜூன் '27 அன்று நடைபெறும் என்றும், இதற்கான வேட்புமனுத்தாக்கல் ஜூன் '23 அன்று நடைபெறும் என்றும் கூட்டுறவுச் சங்கங்களுக்கான மாநிலத் தேர்தல் ஆணையர் திரு.ம.ரா.மோகன், இ.ஆ.ப., (ஓய்வு) தெரிவித்துள்ளார். இது சம்பந்தமாக அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு :-

### காலிப் பணியிடங்கள்

தமிழகத்தில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஐந்து நிலைகளில் நடைபெற்ற தேர்தலில் **21,027** சங்கங்களில் **2,04,889** நிர்வாகக்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களில் **20,993** பேர் தலைவர்களாகவும், **20,996**பேர் துணைத்தலைவர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பொறுப்பேற்றனர். இதற்குப்பின்னர், தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், துணைத்தலைவர்கள் மற்றும் நிர்வாகக்குழு உறுப்பினர்களில் சிலர் இறந்துவிடுதல் அல்லது தங்கள் பதவியை ராஜினாமா செய்தல் போன்ற காரணங்களால் அவர்கள் வகித்துவந்த பதவிகளில் காலிப்பணியிடங்கள் ஏற்பட்டன. இவ்வாறாக கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் மற்றும் பிற ஏழு செயற்பதிவாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள **401** கூட்டுறவுச் சங்கங்களில் **530** நிர்வாகக்குழு உறுப்பினர் பணியிடங்களும், **135** கூட்டுறவுச் சங்கங்களில் **95** தலைவர் பணியிடங்களும், **49** துணைத்தலைவர் பணியிடங்களும் தற்போது காலிப்பணியிடங்களாக உள்ளன.

### இடைத்தேர்தல்

மேற்குறிப்பிட்ட **530** நிர்வாகக்குழு உறுப்பினர் பணியிடங்களையும், **95** தலைவர் பணியிடங்களையும், **49** துணைத்தலைவர் பணியிடங்களையும் இடைத்தேர்தல் மூலம் நிரப்புவதற்கான தேர்தல் திட்டத்தையும், தேர்தல் அட்டவணையையும் தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது. அந்தந்த மாவட்ட தேர்தல் அலுவலர்கள்

இது தொடர்பான தேர்தல் அறிவிப்பினை வெளியிட்டுள்ளனர். இந்த 530 நிர்வாகக்குழு உறுப்பினர் காலிப்பணியிடங்களில் 107 பணியிடங்களை ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தவரைக் கொண்டும், 117 பணியிடங்களை பெண்களைக் கொண்டும், 306 பணியிடங்களை பொதுப்பிரிவினரைக் கொண்டும் நிரப்பவேண்டும். தலைவர் மற்றும் துணைத்தலைவர் தேர்தலில் வகுப்புவாரி இட ஒதுக்கீடு கிடையாது.

<u>வாக்காளர் பட்டியல்</u>

மேற்குறிப்பிட்ட 401 கூட்டுறவுச் சங்கங்களில் 530 நிர்வாகக்குழு உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கும், 135 கூட்டுறவு சங்கங்களில் 95 தலைவர்கள் மற்றும் 49 துணைத்தலைவர்களை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் திட்டத்தின்படி தொடர்புடைய சங்கங்களில் 16.6.2014 அன்று வாக்காளர் பட்டியல் வெளியிடப்படும். இதன் பேரிலான ஆட்சேபணை ஏதும் இருப்பின் அதனை 18.6.2014 வரை தெரிவிக்கலாம். இறுதி வாக்காளர் பட்டியல் 20.6.2014 அன்று வெளியிடப்படும்.

<u>வேட்புமனுத் தாக்கல்</u>

இந்த இடைத்தேர்தலுக்கான வேட்புமனுக்களை 23.6.2014 காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை தாக்கல் செய்யலாம். அன்று மாலை 5.30 மணிக்குள் வேட்புமனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டு அன்று மாலை 6.00 மணிக்கு தகுதியான வேட்பாளர் பட்டியல் தேர்தல் அலுவலரால் வெளியிடப்படும்.

<u>வேட்புமனு திரும்பப்பெறுதல்</u>

தாக்கல் செய்த வேட்புமனுவை திரும்பப் பெற விரும்புவோர் 24.6.2014 காலை 10.00 மணிமுதல் மாலை 4.00 மணி வரை திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். அன்று மாலை 5.00 மணிக்கு போட்டியிடும் வேட்பாளர்களின் இறுதிப்பட்டியல் தேர்தல் அலுவலரால் வெளியிடப்படும்.

<u>வாக்குப்பதிவு</u>

இந்த இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு 27.06.2014 அன்று காலை 8.00 மணிக்குத் தொடங்கி மாலை 5.00 மணி வரை நடைபெறும்.

<u>வாக்கு எண்ணிக்கை</u>

இந்த இடைத்தேர்தலில் 27.06.2014 அன்று பதிவான வாக்குகளை எண்ணும் பணி மறுநாள், அதாவது 28.06.2014 காலை 10.00 மணிக்குத் தொடங்கும். வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்டவுடன் முடிவுகள் அறிவிக்கப்படும்.

## தலைவர், துணைத்தலைவர் தேர்தல்

தலைவர் மற்றும் துணைத்தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் அறிவிப்பு 28.06.2014 அன்று தேர்தல் அலுவலரால் வழங்கப்படும். தலைவர் மற்றும் துணைத்தலைவரை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் 2.7.2014 அன்று காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

இடைத்தேர்தல் நடைபெறவுள்ள கூட்டுறவுச் சங்கங்களின் பெயர் மற்றும் இதர விபரங்கள் குறித்து அந்தந்த மாவட்ட தேர்தல் அலுவலரையும், மாவட்ட தேர்தல் பார்வையாளர்களான மண்டல இணைப்பதிவாளர்களையும் தொடர்பு கொள்ளலாம்.

## ஐந்து இடைத்தேர்தல்கள்

தற்பொழுது நடைபெறவுள்ள இடைத்தேர்தல் அல்லாமல் கடந்த ஆகஸ்ட் ‘2013 முதல் இதுவரை கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஐந்து முறை இடைத்தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் 5481 கூட்டுறவுச் சங்கங்களில் காலியிடம் ஏற்பட்ட 11265 நிர்வாகக்குழு உறுப்பினர் பதவிகளை நிரப்பிட தேர்தல் நடத்தப்பட்டுள்ளது. இதேபோல் இந்த ஐந்து இடத்தேர்தல்கள் மூலமாக 122 கூட்டுறவு சங்கங்களில் 78 தலைவர் பதவிகளையும், 48 துணைத்தலைவர் பதவிகளையும் நிரப்பிட தேர்தல் நடத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. தற்போது நடைபெறவுள்ளது ஆறாவது இடைத்தேர்தல் ஆகும்.

## புதிய கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்

புதிதாக தோற்றுவிக்கப்படும் கூட்டுறவுச் சங்கங்களின் இடைக்கால நிர்வாகக்குழுவின் பதவிக்காலம் ஆறு மாதங்கள் மட்டுமே ஆகும். இந்த ஆறுமாத காலம் முடிவடைவதற்குள் இச்சங்கங்களுக்கு முறைப்படி தேர்தல் நடத்தி தேர்ந்தெடுக்கப்படும் நிர்வாகக்குழுவிடம் பொறுப்புகளை ஒப்படைக்கவேண்டும். இவ்வகையில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாதந்தோறும் தேர்தல் நடத்தப்பட்டு வருகிறது. அவ்வாறு இவ்வகையில் 1669 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்தப்பட்டுள்ளது. பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அல்லாத புதிதாக தோற்றுவிக்கப்பட்ட வேறுவகை கூட்டுறவுச் சங்கங்கள் முப்பதுக்கு இதுவரை தேர்தல் நடத்தப்பட்டுள்ளது. எனவே காலிப்பதவியிடங்களை நிரப்புவதற்கு இடைத்தேர்தல் நடத்துவது மற்றும் புதிதாக தோற்றுவிக்கப்படும் கூட்டுறவுச் சங்கங்களின் இடைக்கால நிர்வாகக்குழுவின் பதவிக்காலம் முடிவடைவதற்குள் முறைப்படியான தேர்தல் நடத்தி தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகக்குழுவிடம் பொறுப்புகளை ஒப்படைப்பது ஆகிய தொடர் தேர்தல் பணிகளை தமிழ்நாடு மாநில கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல் ஆணையம் தற்போது மேற்கொண்டு வருகிறது.

<u>**தலைமைச் சங்கங்களுக்கான தேர்தல்**</u>

தற்பொழுது அறிவிக்கப்பட்டுள்ள தேர்தல் திட்டத்தின்படி பிரதம கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் மத்திய கூட்டுறவுச் சங்கங்களில் காலியாக உள்ள நிர்வாகக்குழு உறுப்பினர்கள் பணியிடங்களும் தலைவர் மற்றும் துணைத்தலைவர் பணியிடங்களும் நிரப்பப்பட உள்ளன. தலைமை கூட்டுறவுச் சங்கங்களில் காலியாக உள்ள நிர்வாகக்குழு உறுப்பினர்கள், தலைவர், துணைத்தலைவர் ஆகிய பணியிடங்களை நிரப்புவதற்கான தேர்தல் ஜீலை மாத இறுதியில் நடைபெறும். இதற்கான தேர்தல் அறிவிப்பு ஜீலை முதல் வாரத்தில் வெளியிடப்படும்.

மேற்கண்டவாறு கூட்டுறவுச் சங்கங்களுக்கான மாநிலத் தேர்தல் ஆணையர் திரு. ம.ரா. மோகன், இ.ஆ.ப. (ஓய்வு) தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

**ஆணையர்.**

**<u>கூட்டுறவுச் சங்கங்களுக்கான இடைத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படவுள்ள நிர்வாகக்குழு உறுப்பினர்கள்,</u>**

**<u>தலைவர்கள் மற்றும் துணைத்தலைவர்கள் எண்ணிக்கை விவரம்</u>**

| வ.எண். | மாநில தேர்தல் அலுவலரின் பெயர் | இடைத்தேர்தல் நடைபெற உள்ள சங்கங்களின் எண்ணிக்கை | இடைத்தேர்தலில் தேர்ந்தெடுக்கப் பட வேண்டிய நிர்வாகக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை | தேர்ந்தெடுக்கப்படவேண்டிய உறுப்பினர்களின் பிரிவு | | | | இடைத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய தலைவர்/ துணைத்தலைவர் விவரம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் | மகளிர் | பொது | கூடுதல் | சங்கங்களின் எண்ணிக்கை | தலைவர் | துணைத் தலைவர் |
| 1. | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 293 | 375 | 70 | 81 | 224 | 375 | 101 | 72 | 33 |
| 2. | இயக்குநர், மீன்துறை | 23 | 25 | 18 | 1 | 6 | 25 | 2 | 2 | – |
| 3. | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டுவசதி) | 40 | 53 | 13 | 11 | 29 | 53 | 10 | 6 | 5 |
| 4, | இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் | 30 | 54 | 3 | 13 | 38 | 54 | 18 | 13 | 9 |
| 5. | இயக்குநர், சர்க்கரைத்துறை | 1 | 2 | - | 1 | 1 | 2 | – | – | – |
| 6. | இயக்குநர், வேளாண்மைத் துறை | 3 | 3 | 1 | 1 | 1 | 3 | 1 | – | 1 |
| 7. | இயக்குநர், சமூகநலத்துறை | 1 | 1 | - | 1 | - | 1 | 1 | 1 | – |
| 9. | தொழில் துறை மற்றும் தொழில் வணிகத்துறை இயக்குநர் | 10 | 17 | 2 | 8 | 7 | 17 | 2 | 1 | 1 |
| | கூடுதல் : | 401 | 530 | 107 | 117 | 306 | 530 | 135 | 95 | 49 |

ஆணையர்